# குரு

- கு+ர்+உ="கு" காரத்திற்குச் சித்தியைக் கொடுப்பவன் எனவும், "ர" காரத்திற்குப் பாபத்தைத் தகிப்பிக்கும் தீயென்றும், "உ" காரத்திற்கு சிவன் என்றும் பொருள்.
- இம்மூன்றும் நிறைந்தவனே குருவாவான். குரு மலத்தை நீக்குபவர். கு-மலம். ரு-நீக்குபவர்.
- குரு தன் சீடனுக்குச் செய்யும் உபகாரத்தை தீஷை எனக் கூறுவர்.
- தீ+க்ஷா=தீக்ஷா. ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்குவது என்பது இதன் பொருளாகும்.
- தீக்கை சமய தீக்கை, விசேட தீக்கை, நிர்வாண தீக்கை, என மூவகைப்படும்.
- சரியை மார்க்கத்தைத் தொடங்குமுன் செய்யப்படும் தீக்கை சமய தீக்கை எனப்படும்.
- கிரியைக்கு விசேட தீக்கையும், யோகத்திற்கும் ஞானத்திற்கும் நிர்வாண தீக்கையும் உரியன.
- தீக்கை செய்யும் முறை ஏழுவகைப்படும். அவை ஸ்பர்சம், நயனம், மானதம், மந்த்ரம், யோகம், ஔத்தி என்பனவாம்.

1. <u>**ஸ்பர்ச தீக்கை:**</u>

குரு தனது கரங்களால் சீடனைத் தொடுவது ஸ்பர்ச தீக்கை எனப்படும்.

2. <u>**நயன தீக்கை:**</u>

குரு தனது அருட்பார்வையால் மாணவனை நோக்குதல் நயன தீக்கை எனப்படும். அருட்பார்வையால் திருவருள் பெருகும்.

3. **மானத தீக்கை:**

- குரு தன் மனத்தால் மாணாக்கனது மனத்தைத் தன்வயப்படுத்துகிறார்.
- மாணாக்கனது மனத்தைப் பற்றியுள்ள கர்மத்தின் வலி இதனால் குறைகின்றது.
- கடற்கரையில் குழி தோண்டி முட்டையிட்ட ஆமை அம்முட்டையை மனதில் நினைந்து வேகமாய்ப் பாய்ந்துவரும் மனோவலியால் முட்டை குஞ்சாவதைப்போல, ஆசாரியன் மனோசக்தியால் சீடனை நினைக்கச் சீடன் பரிபக்குவம் எய்துகின்றான்.

4. **வாசக தீக்கை:**

வாசகம் என்பது உபதேசம். இது குரு உபதேசம் எனப்படும். அறிவுடையோர் குரு உபதேசத்தால் தெளிவடைவர்.

5. **மந்த்ர தீக்கை:**

குருவானவர் ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து முதலிய மந்திரங்களைச் சீடனுக்கு உபதேசித்து அருளுவதாம்.

6. **யோக தீக்கை:**

யோகம் என்பது சேர்க்கை. குரு மாணாக்களை இறைவனோடு ஒன்ற வைப்பதால் இது யோக தீக்கை

எனப்படும். யோக முறைகளைப் பயிற்றுவித்தலும் இத்தீக்கையின் பாற்படும்.

7. **ஔத்திரி தீக்கை:**

- இது ஹோமகுண்டத்தில் ஹோமாக்கினியில் மாணவனைப் பற்றி தின்ற மலங்களை ஈர்த்துத் தகிப்பித்து அவனைப் பரிசுத்தப் படுத்துவதாகும்.
- குண்ட மண்டலங்களை ஹோமத்தோடு செய்வது கிரியாவதியென்றும், குண்டமண்டலங்களின்றி ஹோமத்தை மனதால் செய்வது ஞானவழியென்றும், இத்தீக்கை இருவகைப்படும்.
- ஆதலின் இந்துக்களாய்ப் பிறந்த நாம் அனைவரும் அவரவருக்குகந்த தீக்கை முறைகளைக் குருவின்பாற் பெற்று அதனைக் கைக்கொண்டொழுகி, மலம் நீங்கி சுத்தமெய்தி இறைவன் மலரடி அடைந்து இன்புறுவோமாக.

------***-----***----